## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுஉத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கானாவில் பாகே அஹ்மத் ஜல்ஸா திடலில் 18.04.2008 அன்று ஆற்றிய ஜுஉமுஆ பேருரை

*தஸஹ்ஹுஉத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஉஸுஓர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

நேற்று ஆண்டு மாநாட்டில் துவக்க உரையின்போது நான் இறை வணக்கத்தைப் பற்றி உங்களுக்கு கவனமூட்டியிருந்தேன். இறைவணக்கத்திற்குரிய சிறந்த வழிமுறையாக ஒரு முஸ்லிம் தினமும் ஐந்து நேரம் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. இது தொடர்பாக இறைவன் திருக்குர்ஆனில் எண்ணற்ற இடங்களில் கூறியுள்ளான். மேலும், திருக்குர்ஆனின் ஆரம்பத்திலேயே இறையச்சமுள்ளவர்களின் அடையாளங்கள் பற்றி குறிப்பிடும் போது அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள் என்று கூறிய பிறகு அவர்கள் முறையாக தொழுகையை அதற்குரிய உரிமைகளுடன் நிறைவேற்றுவார்கள் என்று இறைவன் கூறியுள்ளான்.

தொழுகையை அதற்குரிய உரிமைகளுடன் நிறைவேற்றுவது என்றால் என்ன? தொழுகைக்குரிய உரிமையை நிறைவேற்றுவது என்பது தொழுகைக்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவதாகும். பள்ளிவாசல்களில் அல்லது ஜமாஅத் Center-களில் அந்த குறிப்பிட்ட நேரத்திற்குச் சென்று ஜமாஅத்தாக தொழ வேண்டும். உலகப் பணிகளின் காரணமாக தொழுகைகளை சேர்த்து தொழக் கூடாது. பெண்கள் ஷரீஅத் தடை செய்கின்ற எவ்வித காரணங்களும் இல்லாமல் இருந்தால் வீட்டில் முறையாக தொழுகையை நிறைவேற்ற வேண்டும். பெண்களுக்கு தொழுகை மன்னிக்கப்படவில்லை. தொழுகையை நிறைவேற்றுவது மிக முக்கியமான அடிப்படையான இறைகட்டளையாகும். அதை நிறைவேற்றும் பட்சத்தில்தான் ஒருவர் உண்மையான முஸ்லிமாகவும் மூஃமினாகவும் ஆக முடியும். ஒரு நபிமொழியில் தொழுகை இறைவணக்கத்தின் சத்தாக இருக்கின்றது என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே இந்த சத்தைப் பெற்றுக் கொள்வது ஒரு நம்பிக்கையாளரின் குறிக்கோளாக இருக்க வேண்டும். மாநாட்டின் இந்த நாட்களில் தொழுகையின் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்தப்படுவதை நான் பார்க்கின்றேன். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் அனைவரும் அதிக எண்ணிக்கையில் தொழுகைக்காக வருகின்றார்கள். இந்த Training Camp-ல் உங்களிடம் ஏற்படும் இந்த பழக்கம் நிரந்தரமாக உங்களிடம் இருக்கும்படி நீங்கள் செய்ய வேண்டும். நீங்கள் எவ்வாறு தொழுகையின் பக்கம் இப்போது கவனம் செலுத்தியுள்ளீர்களோ அதனையும் நீங்கள் இங்கு கற்றுக் கொண்ட விஷயங்களையும் நீங்கள் உங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும்போது மறக்காமல் இருக்க வேண்டும். வீட்டுப் பணிகளில் அல்லது வியாபாரத்தில் அல்லது விளையாட்டுகளில் ஈடுபட்டவாறு அதில் மூழ்கிய நிலையில் உங்களது படைப்பின் நோக்கத்தை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தனது வருகையின் மிகப்பெரும் நோக்கமாக அடியானுக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு உயிரோட்டமுள்ள தொடர்பை ஏற்படுத்துவதையே குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் முறையாக தொழக்கூடியவராக இருக்க வேண்டும். அவரது தொழுகை ஒரு சுமையை தனது தலையிலிருந்து இறக்கி வைப்பதைப் போல் இருக்கக் கூடாது. மாறாக, அதனை ஒரு கடமை எனக்கருதி அவர் நிறைவேற்ற வேண்டும். அது இல்லாமல் வாழக்கை வீணானதாகும். முழு உலகத்தையும் அஹ்மதிய்யத்தின் மடியில் அமர வைப்போம் என்று நாம் செய்யும் வாதம் உண்மையானது என்றால் அஹ்மதிய்யத் என்றால் என்ன? என்பதை நாம்

தெரிந்திருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். உண்மையில் திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப ஏக இறைவனின் ஆட்சியை மக்களின் உள்ளங்களில் நிலைநாட்டுவதுதான் அஹ்மதிய்யத்தாகும். விண்ணிலும் மண்ணிலும் இருக்கின்ற எல்லா பொருள்களை விடவும் இறைவன் உயர்வானவன் என்று ஒருவர் கருதும்போதுதான் அல்லாஹ்வின் ஆட்சியை மக்களது உள்ளங்களில் நிலைநாட்ட முடியும். எனவே, இறைவனை, எல்லா பொருள்களை விடவும் உயர்வாகக் கருதுவதுடன் அவன் கூறியுள்ள வழிமுறைக்கேற்ப அவனை நாம் வணங்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு நாம் நம்மிடம் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியவாறு அந்த உயிருள்ள என்றும் நிலைத்திருக்கின்ற இறைவனுடன் உள்ள தொடர்பை நாம் நிலைநாட்டாமல் இருந்தால், இந்த வாதமும் பொருளற்றதாக ஆகி விடும். நாம் நமது பிரச்சாரத்தை ஒவ்வொரு நபருக்கும் எட்ட வைத்து அவரை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவோம் என்று நாம் கூறுவதும் தவறாகி விடும். இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? உலகம் இறைவனை மறந்து விட்டதன் காரணமாகத்தான் அவர்கள் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்குப் ஏற்ப திருக்குர்ஆனின் போதனைகள் ஒளிமயமானதாக இருந்தும் கூட ஒரு காலத்தில் அது மங்கலாக பொலிவிழந்து காணப்பட்டது.

பாருங்கள்! உலகில் பல நூறு மில்லியன் கணக்கில் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். இவைகளில் பல முஸ்லிம் நாடுகள் எண்ணெய் வளத்தால் செல்வச் செழிப்புடன் காணப்படுகின்றன. எண்ணற்ற செல்வங்கள் அவர்களிடம் இருந்தும்கூட முழு உலகத்தையும் இறைவன் முன்னால் குனிய வைப்போம் என்ற வாதத்தை அவர்கள் செய்யவில்லை. ஆனால், நிச்சயமாக வாள் மூலம் இரத்தத்தை ஓடச் செய்து மார்க்கத்தை பரப்ப இருக்கின்ற ஒரு மஸீஹின் வருகையை அவர்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு யாரும் வரப்போவதில்லை.

ஆனால், நீங்கள் சிறிய ஜமாஅத்தாக இருந்தும்கூட இஸ்லாத்தை உலகின் எல்லா மூலைகளிலும் எட்ட வைக்க வேண்டும் என்பதுதான் உங்களது எண்ணமாக இருக்கின்றது. இப்போது இங்கு ஆப்பிரிக்காவின் பல்வேறு நாடுகளிலிருந்தும் ஜமாஅத்தின் பிரதிநிதிகள் வந்துள்ளார்கள். Borkinafaso, Ivory Coast, Liberia, Guinea, Gambia, Congo போன்ற பல நாடுகளிலிருந்து ஜமாஅத்தின் பிரதிநிதிகள் வந்துள்ளார்கள். இப்படிப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் நமது ஜமாஅத் எண்ணிக்கையைப் பொருத்தவரையிலும் பொருளாதார ரீதியிலும் எந்த அளவு உள்ளதென்றால், நாம் இந்த நாடுகளில் நமது கொடியை நாட்டி விடுவோம் என்று ஒருபோதும் நம்மால் கூற முடியாது. ஆனால், எல்லா நபிமார்களையும் இந்த உலகிற்கு அனுப்பி வைத்த ஒரு மிகப்பெரும் சக்தி நம்முடன் இருக்கின்றது. அதுதான் நமக்கு உதவி செய்கிறது. அந்த சக்தி விண்ணிற்கும் மண்ணிற்கும் எஜமானனாக இருக்கும் இறைவனே ஆவான். அவன் எல்லா நபிமார்களையும் போன்றே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக இந்த உலகிற்கு அனுப்பி வைத்துள்ளான். இஸ்லாத்தின் எந்த அழகிய போதனைகளை முஸ்லிம்கள் மறந்து விட்டார்களோ அதனை அதன் உண்மையான வடிவத்தில் உலகின் முன்பு எடுத்து வைக்கும் பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதன் மூலமாக உலகமும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை அறிந்து ஏக இறைவனை வணங்க வேண்டும். எனவே, இவ்வளவு பெரிய வாதத்தை அஹ்மதிகளாகிய நாம் செய்கின்ற போது அந்த ஏக இறைவனை வணங்குவதற்காக அவன் முன்னால் குனிவதுதான் நமது முதல் கடமையாக

இருக்கின்றது. அந்த இறைவனிடம் நீங்கள் துஆ கேட்க வேண்டும். மேலும் துஆக்கள் செய்வதற்கான சிறந்த வழிமுறையாக தொழுகைகள் இருக்கின்றன. இந்த தொழுகைகளும், துஆக்களும்தான் நமக்கு வெற்றியை தரும். அவ்வாறில்லையென்றால், நான் ஏற்கனவே கூறியது போன்று உலகை வெற்றி கொள்ளும் வகையிலுள்ள எந்த ஒரு உலக சக்தியும் நம்மிடம் இல்லை. உலகில் மார்க்கமானது செல்வத்தாலும் சக்தியாலும் ஒருபோதும் பரவியதில்லை. இஸ்லாத்தின்மீது ஆட்சேபனை செய்பவர்கள் இஸ்லாம் வாளால் பரவியது என்று ஆட்சேபனை செய்து வருகின்றார்கள் நவூதுபில்லாஹ் (அல்லாஹ் காப்பானாக). இது முற்றிலும் தவறான ஒரு பொய்யான குற்றச்சாட்டாகும். போர் செய்வதற்கான முழுமையான ஆயுதங்கள் எதுவுமில்லாமல், சாப்பிடுவதற்கு உணவில்லாமல் இருந்த நிலையில் உஹது போர்க்களத்திலும், பத்ர் போர்க்களத்திலும், அகழ்ப் போரிலும் எந்த உலக சக்திகள் நமக்கு உதவி செய்து வெற்றியை தேடித் தந்தன? உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்கள் தான் நமக்கு வெற்றி தேடித் தந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்களை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். அதன் விளைவாக வெற்றியை வழங்கினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலின் காரணமாக சஹாபாக்களுக்கு அல்லாஹ்வுடன் ஏற்பட்ட தொடர்புதான் அவர்களது ஈமானுக்கு வலுவூட்டியது. இறைவனுக்காக தன்னை மாய்த்துக் கொண்ட ஒருவர் செய்த துஆக்கள்தான் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. இந்த முன்மாதிரியைத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்முன் நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். அதாவது இஸ்லாத்தின் வெற்றி வெளிப்படையான எந்த சக்தியாலும் ஏற்படாது. மாறாக, அது துஆக்களால்தான் ஏற்படும். துஆக்களால் தான் வெற்றி கிடைத்தது. வெளிப்படையான சக்திகள் மூலம் நாட்டை வெல்லலாம். ஆனால் உள்ளங்களை வெல்ல முடியாது. நீங்கள் உங்களுடன் வாழும் சமுதாயங்களின் உள்ளங்களை வெல்ல வேண்டும். அவர்களை இறைவன் முன்னால் கொண்டு செல்ல வேண்டும். அதற்காக நாம் முதலில் நமது தொழுகைகளையும் இறைவணக்கங்களையும் பாதுகாக்கின்ற தகுதியுடையவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். ஜமாஅத்தில் கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி இந்த வருடம் ஜமாஅத் கிலாஃபத் ஜூப்ளி கொண்டாடுகிறது. இது என்ன ஜூப்ளி? நாம் கிலாஃபத் ஜூப்ளி மாநாட்டை நடத்துகின்றோம் என்பதில் மகிழ்ச்சி அடைவது அல்லது பல்வேறு கிளை அமைப்புகள் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது அல்லது சில Sovenior-களை அச்சிட்டு வெளியிடுவது போன்ற இவை எல்லாமே நமது கொண்டாட்டங்களில் ஒரு சிறிய வெளிப்பாடேயாகும். இந்த நூறு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டதால் கிலாஃபத்தின் வடிவத்தில் நம்மீது அல்லாஹ் இறக்கியுள்ள இந்த அருட்கொடைக்கு நாம் நன்றி கூறும் விதமாக எங்கள் இறைவனிடம் இன்னும் அதிகமாக தொடர்பை உருவாக்க முயற்சி செய்வோம் என்று நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்போதுதான் நாம் நமது உண்மையான நோக்கத்தில் வெற்றி பெற்றவர்களாக இருப்போம். எனவே, முன்பை விட அதிகமாக நாம் நமது தொழுகைகளையும் இறைவணக்கங்களையும் பாதுகாக்க வேண்டும். இறைவனுக்கு நன்றி கூறுகின்ற இந்த முறைதான் நம்மீது அல்லாஹ்வின் அருட்கொடைகளை மேலும் அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். திருக்குர்ஆனில் எங்கு நம்பிக்கையாளர்களிடம் அல்லாஹ் கிலாஃபத் தொடர்பான வாக்குறுதியை வழங்கியுள்ளானோ அதற்கு அடுத்த வசனத்தில் அல்லாஹ் وَأَقِيمُوا الصَّلَوٰةَ وَآتُوا الزَّكَوٰةَ وَأَطِيعُوا الرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ ۝ - நீங்கள் எல்லாரும் தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள். தூதருக்கு கட்டுப்பட்டு நடங்கள். அதனால் உங்கள் மீது கருணை காட்டப்படும் என்று அல்லாஹ் கூறுகின்றான். இதிலிருந்தும் கிலாஃபத் அமைப்பிலிருந்தும் பலன் பெறுவதற்கு தொழுகையை நிலைநாட்டுவது முதல் நிபந்தனையாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதி ஆண், பெண், இளைஞர், முதியவர், சிறுவர், சிறுமியர் தங்களது தொழுகையின் பக்கம் கவனம்

செலுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறுவதன் காரணம் உங்களுக்கு கிடைத்துள்ள இந்த அருட்கொடையிலிருந்தும் நீங்கள் அதிகமாக பலன் பெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்பவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதிகளுக்கு ஏற்பவும் கிலாஃபத்தின் இந்த தொடர் நிரந்தரமாக நீடித்திருக்கும். ஆனால், தங்களது இறைவணக்கங்கள் மூலம் எவர் இறைவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்திக் கொள்வாரோ அவரே இந்த அருட்கொடையிலிருந்தும் பலன் பெறுவார். பிறகு நான் தற்போது கூறிய திருக்குர்ஆன் வசனத்தில் தொழுகையை நிறைவேற்றி இறைவணக்கங்கள் மூலம் அல்லாஹ்வுடன் தனது தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதுடன் பொருள் தியாகம் செய்வதும் உங்களது கடமையாகும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அல்லாஹ்வின் அருளால் பொருள் தியாகம் செய்வதில் கானா ஜமாஅத் மிக விரைவாக முன்னேறி வருகிறது. நினைவூட்ட வேண்டிய தேவை இருக்கத்தான் செய்யும். எப்போதெல்லாம் இது தொடர்பாக நினைவூட்டப்பட்டிருக்கின்றதோ அப்போதெல்லாம் அதற்கு மிகச்சிறந்த நல்ல விளைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இளைஞர்கள், புதிதாக பைஅத் செய்தவர்கள் ஆகியோரின் தர்பிய்யத்திற்காக நான் கூற விரும்புவது என்னவென்றால் ஜமாஅத்தில் பொருள் தியாகத்தின் அமைப்பானது அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நமது சீர்திருத்தத்திற்காகவே வைக்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனில் வேறு பல இடங்களில் ஸக்காத்தை தவிர பிற பொருள் தியாகங்கள் தொடர்பாகவும் கூறப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் நமது நஃப்ஸ் சீர்திருத்தத்தைப் பெறும். இறைவன் மீது உறுதியான நம்பிக்கை உள்ளவரால்தான் இறைவனுக்காக பொருள் தியாகம் செய்ய முடியும். இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக ஒருவர் செய்கின்ற எந்த செயலையும் எந்த நன்மையையும் இறைவன் வீணாக்க மாட்டான். அல்லாஹ் ஜமாஅத்தே அஹ்மதிய்யா கானாவிற்கு அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக பொருள் தியாகங்கள் செய்யும் நற்பேற்றை வழங்கியுள்ளான். இதற்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். நீங்களும் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். சில வசதி படைத்த தூய உள்ளம் கொண்ட அஹ்மதிகள் பெரும் பெரும் பள்ளிவாசல்களை கட்டியுள்ளார்கள். ஒரு உலகவாதியிடம் செல்வம் இருந்தால் அவர் அதனை தனது வீட்டைக் கட்டுவதற்கும் அல்லது வீண் செலவுகள் செய்வதற்கும் பயன்படுத்துகின்றார். ஆனால், இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு காதியானிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் எப்படிப்பட்ட தூய உள்ளம் கொண்டவர்களை வழங்கியுள்ளான் என்றால் அல்லாஹ் அவர்களது உள்ளங்களை தனது மார்க்கத்திற்காக பொருள் தியாகங்கள் செய்வதற்காக திறந்துள்ளான். எனவே, ஜமாஅத்தில் புதிதாக பைஅத் செய்து இணைகின்றவர்களும் இளைஞர்களும் எப்போதும் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். பொருள் தியாகம் செய்வதும் அல்லாஹ்வின் பல்வேறு கட்டளைகளுள் ஒரு கட்டளையாக இருக்கின்றது. மேலும் கிலாஃபத்தின் அருட்கொடையுடன் சேர்த்து அல்லாஹ் அதனை குறிப்பாக எடுத்துக் கூறியுள்ளான்.

பிறகு அல்லாஹ் இந்த வசனத்தில் தூதருக்குக் கட்டுப்பட்டு நடப்பதைப் பற்றி கூறியுள்ளான். அதன் மூலமாக நீங்கள் அல்லாஹ்வின் கருணையைப் பெற தகுதி உடையவர்களாக ஆகி விடுவீர்கள் என்று அவன் கூறியுள்ளான். அல்லாஹ்வின் கட்டளையே அவனது தூதரின் கட்டளையாகவும் இருக்கின்றது. இதைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் **அதிவுல்லாஹா வ அதிவுர் ரஸூல்** - அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடங்கள். அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று கூறியுள்ளான். என்னை நீங்கள் வணங்கிய பிறகு ஒரு தூய்மையான சமுதாயத்தை நிறுவுவதற்காக நான் உங்களுக்கு திருக்குர்ஆனில் கூறியுள்ள அனைத்து விஷயங்களையும் நீங்கள் செயல்படுத்த

வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். பிறகு தூதருக்கு கட்டுப்படுதல் என்பதில் வர வேண்டிய மஹ்தி மஸீஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள ஷரீஅத்திற்கு ஏற்ப மக்களை உண்மையான முறையில் செயல்பட வைத்து தானும் அவ்வாறு செயல்படுவார் என்ற விஷயமும் இருக்கின்றது. அவர் நேர்மையான முறையில் தீர்ப்பு வழங்குபவராக இருப்பார். எந்த விஷயங்களைப் பற்றி அவர் உங்களுக்கு கட்டளையிடுகின்றாரோ அதனை நிச்சயமாக நீதியில் நிலைத்து நின்றவாறே அவர் உங்களுக்கு கட்டளையிடுவார். அவரது ஒவ்வொரு கட்டளையும் ஞானம் நிறைந்த கட்டளையாக இருக்கும். எனவே அவர் கூறும் விஷயங்களை மேலோட்டமாகப் பார்த்து விட்டு செல்லக் கூடாது. அல்லாஹ்வின் கட்டளைகளுள் ஒரு கட்டளை பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தெளிவாக கூறியிருப்பது பற்றி இன்று நான் உங்களிடம் விளக்க இருக்கின்றேன். அது இளைஞர்களாக இருக்கின்ற ஆண்கள், பெண்கள் ஆகியோருடன் தொடர்புடையதாகும். அஹ்மதி பெண்கள் அஹ்மதி ஆண்களுடன் தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதன் பக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு குறிப்பாக கவனமூட்டினார்கள். அப்போதுதான் எதிர்கால தலைமுறை அஹ்மதிய்யத்தில் நிலைத்து நிற்க முடியும். இளைஞர்கள் இரண்டு கப்பல்களில் தங்களது கால்களை வைக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இளைஞர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. தந்தை அஹ்மதியாக இல்லாமல் இருந்தால் தந்தையின் தாக்கம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தாய் அஹ்மதியாக இருந்தும் கூட அவரது பிள்ளை சில நேரங்களில் அஹ்மதியாக இருப்பதில்லை. மாறாக சில நேரங்களில் இருவருக்கு இரண்டு வேறுபட்ட மார்க்கம் இருப்பதால் பிள்ளை மார்க்கத்தை விட்டுவிட்டு வெகு தொலைவில் சென்று விடுகின்றார். இவ்வாறே அஹ்மதி இளைஞர்களும் அஹ்மதி பெண்களையே திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால், அஹ்மதியல்லாதவர்களை திருமணம் செய்வதன் மூலமாக ஒரு பக்கம் அவர்கள் அஹ்மதிப் பெண்களுக்கு அவர்களுக்குரிய உரிமையை வழங்காமல் புறக்கணிக்கின்றார்கள். மறுபக்கம் இதனால் இவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகளுக்கும் இதனால் தீய தாக்கம் ஏற்படுகின்றது. அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள அருட்கொடையில் உங்கள் பிள்ளைகளை நீங்கள் நிலைத்திருக்கும்படி செய்ய விரும்பினால் பிறகு நீங்கள் உங்களது விருப்பத்தை மட்டும் பார்க்கக் கூடாது. மாறாக, உங்கள் மார்க்கத்தை நீங்கள் பார்க்க வேண்டும். எனக்கு இங்கிருந்தும் ஏனைய ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தும் பல பெண்கள் கடிதங்கள் எழுதுகின்றார்கள். அவற்றில் எங்களுக்குப் பிடித்த சம்பந்தம். ஆனால், அஹ்மதியல்லாதவர்களாக இருக்கின்றார்கள். நாங்கள் அந்த சம்பந்தத்தை செய்யலாமா? வேண்டாமா? நாங்கள் எவ்வாறு நடந்த கொள்ள வேண்டும்? என்று நீங்கள் கூறுங்கள் என எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இந்த பெண்கள் கேட்பது இவர்களது மார்க்கம் இவர்களது விருப்பத்தை விட இவர்களுக்கு பிரியமாக இருக்கின்றது என்பதற்கு ஆதாரமாகும். எப்போதும் ஒன்றை நினைவில் வையுங்கள். எதுவரை நீங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்வீர்களோ அதுவரை நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடையிலிருந்து பலன் அடைந்து கொண்டேயிருப்பீர்கள். அவ்வாறே அஹ்மதி இளைஞர்களும் இந்த அருட்கொடையிலிருந்து பலன் பெறுவார்கள். அல்லாஹ்வின் அதிகமான அருட்கொடைகளுக்கு நீங்கள் வாரிசாகி விடுவீர்கள்.

எனவே, அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூறு ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி ஒவ்வொரு அஹ்மதியும் அவர் அல்லாஹ்வின் திருப்திக்கே முதலிடம் வழங்க வேண்டும் என்று உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் இறைவனை வணங்குவதிலும் அவனது கட்டளைகளைப் பேணி நடப்பதற்கும் தன்னால் இயன்றவரை அவர் முயற்சி செய்வார் என உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் செய்துள்ள பைஅத் உடன்படிக்கையை எப்போதும் நிறைவேற்ற முயற்சி செய்வதற்கும் அவர் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது ஜமாஅத்தில் இணைந்திருப்பதாக தன்னைக் கருதுகின்ற மக்களே! நீங்கள் உண்மையிலேயே தக்வாவின் வழிகளில் முன்னேறிச் செல்லும்போது தான் வானத்தில் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக கருதப்படுவீர்கள். எனவே உங்களது ஐந்து வேளை தொழுகைகளை எந்த அளவு அச்சத்தோடும் உருக்கத்தோடும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்றால் நீங்கள் இறைவனைக் காண்பதைப் போல் அவை அமைய வேண்டும். இறைவனுக்காக உண்மையுடன் உங்களது நோன்புகளை நிறைவேற்றுங்கள். ஸக்காத் கொடுப்பதற்கு தகுதியுடைய ஒவ்வொருவரும் ஸக்காத் கொடுக்கட்டும். எவர் மீது ஹஜ் செய்வது கடமையாகி விட்டதோ அவருக்கு எவ்வித தடையுமில்லையென்றால் அவர் ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும். நன்மையை சரியாக நிறைவேற்றுங்கள். விழிப்புடன் இருந்தவாறு தீமைகளை விட்டு விடுங்கள். தக்வாவை விட்டும் காலியாக இருக்கும் எந்த ஒரு செயலும் இறைவனை சென்றடையாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

**பிறகு தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இப்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். மகிழ்ச்சியால் துள்ளுங்கள். ஏனென்றால் இறைவன் உங்களுடன் இருக்கின்றான். நீங்கள் உண்மையிலும் ஈமானிலும் நிலைத்திருந்தால் பிறகு மலக்குகள் உங்களுக்கு போதனைகளை வழங்குவார்கள். விண்ணிலிருந்து அமைதி உங்களுக்காக இறங்கும். பரிசுத்த ஆவி மூலமாக உங்களுக்கு உதவி வழங்கப்படும். ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும் இறைவன் உங்களுடன் இருப்பான். எவராலும் உங்களை தோற்கடிக்க முடியாது.

அல்லாஹ் எப்போதும் நம்மை ஈமானில் நிலைத்திருக்கும்படி செய்வானாக. தன்னை வணங்குபவர்களாக அவன் நம்மை ஆக்குவானாக. தனது அருள்களை அவன் நமக்கு வழங்குவானாக. தனது அருள்களை அவன் நமக்கு வழங்குவானாக. நாம் எப்போதும் அவனது அருட்கொடைகளுக்கு வாரிசாகுவோமாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAGH-E-AHMAD, GHANA**
**ON 18.04.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**